செய்தி வெளியீடு எண்:487 நாள் : 25.09.2014

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 22.9.2014 அன்று தலைமைச் செயலகத்தில், கிராமப்புற பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் கால்நடைகளை நன்கு பராமரித்து, தரமான மருத்துவச் சிகிச்சைகளை கால்நடைகளுக்கு அளித்திடும் வகையில் பணியமர்த்தப்பட்ட 307 பேர்களுக்கு கால்நடை ஆய்வாளர் நிலை–2க்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

தமிழகத்தின் பொருளாதார முன்னேற்றத்தில் மிக முக்கியப் பங்கு வகிக்கும் வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, மீன்வளத்துறைகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கிராமப்புற ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டம் கடந்த 15.9.2011 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கால்நடை வளர்ப்புக்கு இன்றியமையாத பசுந்தீவன உற்பத்தியில் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருவதால், கால்நடைகளுக்கு வறட்சி காலங்களிலும் தொடர்ந்து பசுந்தீவனம் கிடைப்பது உறுதி செய்யப்பட்டு இரண்டாம் வெண்மை புரட்சிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு வித்திட்டுள்ளது.

கால்நடை பராமரிப்புத்துறை, தமிழகத்தில் உள்ள அனைத்து கால்நடைகளுக்கும் மருத்துவ சிகிச்சை மற்றும் மேம்பட்ட பராமரிப்பு முறைகள் ஆகிய சேவைகளை கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால்நடை மருத்துவமனைகள் மூலம் கட்டணமில்லாமல் வழங்கி வருகிறது. மேலும், கால்நடை கிளை நிலையங்களில் செயற்கை முறை கருவூட்டல் மற்றும் முதலுதவி சேவைகள் கால்நடை ஆய்வாளர்கள் மூலம் கால்நடைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

2011–2012ஆம் ஆண்டு கால்நடை பராமரிப்புத்துறை மானியக் கோரிக்கையில், தொலைதூர கிராமங்களில் உள்ள விவசாயிகள் பயனடையும் வகையில் கால்நடை ஆய்வாளர் பணியிடங்கள் நிரப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, கடந்த 2011–2012ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்ட கால்நடை ஆய்வாளர்களில் பயிற்சி முடித்த 289 பேர்களுக்கு கால்நடை ஆய்வாளர் நிலை–2க்கான பணி நியமன ஆணைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 11.9.2013 அன்று வழங்கப்பட்டன.

அதேபோன்று, 2012–2013ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்ட கால்நடை ஆய்வாளர்களில் பயிற்சி முடித்த 307 பேர்களுக்கு கால்நடை ஆய்வாளர் நிலை–2க்கான பணி நியமன ஆணைகளை வழங்கும் அடையாளமாக ஏழு பேர்களுக்கு தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

இதன் மூலம் தொலைதூர குக்கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு செயற்கை முறைக் கருவூட்டல் மற்றும் முதலுதவிச் சேவைகள் அவர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. பணி நியமனம் செய்யப்பட்டுள்ள இந்தக் கால்நடை ஆய்வாளர்களால் நோய் தடுப்பு பணிகளான தடுப்பூசி போடுதல், குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம் ஆகிய சேவைகளை காலதாமதமில்லாமல் குக்கிராமங்களிலும் அளித்திட இயலும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு டி.கே.எம். சின்னய்யா, தலைமைச் செயலாளர் திரு மோகன் வர்கீஸ் சுங்கத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலாளர் முனைவர் ச. விஜயகுமார், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் திரு த. ஆபிரகாம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை 600 009
நாள்: 25.9.2014